From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 19 /21

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Nagalakshmi | Father/Husband Name | : Murugan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 21.05.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the day of 21.05.2025.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தொந்திலிங்கபுரத்தில் குடியிருந்து கொண்டு வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். வாகன விபத்தில் இறந்துபோன அழகேசன் என் தம்பி. 29.08.2020 ம் தேதி நான் எனது வீட்டில் இருந்தபோது மதியம் சுமார் 02.00 மணிக்கு எனது மாமா முருகேசன் எனக்கு போன் செய்து தம்பி அழகேசனுக்கு விபத்து ஏற்பட்டது என்றும், அவர் மேலூர் அரசு மருத்துவமனையில் இருப்பதாக போனில் எனக்கு தகவல் சொன்னார், நான் உடனே நான் மேலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது என் தம்பி இறந்து கிடந்தார். நான் பார்க்கும் பொழுது என் தம்பிக்கு பின் தலையில் அடிப்பட்டு பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. நான் எனது மாமாவிடம் விபத்து நடந்தது என்று கேட்டபோது வசூல் செய்வதற்காக கொட்டாம்பட்டியிலிருந்து மேலுருக்கு சென்றதாகவும், சுமார் 12.30 மணி இருக்கும்போது பாண்டாக்குடி விலக்கு அருகே சென்றபோது டிப்பர் லாரி ஒன்று அழகேசன் ஒட்டி சென்ற வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னதை நான் கேள்விப்பட்டு தெரிந்துகொண்டேன். போலீசார் என்னைவிசாரித்தார்கள்

எதிரி ஆஜர்

எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை

எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியது என்றால் சரிதான். இறந்தவர் என் தம்பி என்பதாலும், இழப்பீடு கிடைக்க வேண்டி வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.